# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.145/2022

2025 -ம் ஆண்டு ஜூலை மாதம் 18 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.R. சீனிவாசன், Bench Clerk(Gr-III) அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 18.07.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கவிதா (PW-1) | வயது | : | 55 /2025 |
| த/க பெயர் | : | திரு. கரிகாலன் | தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| முகவரி | | பரவாக்கோட்டை | வட்டம் | | மன்னார்குடி |

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் தாக்கல் செய்த வழக்குரையானது நான் சொல்லிய தகவலின் பெயரில் தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதை நான் படித்து பார்த்து தான் கையெழுத்திட்டேன் என்றால் சரிதான். வழக்குரையில் ராஜேசேகரனுக்கும் எனது தாயாருக்கும் திருமணம் எந்த தேதியில் நடந்தது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை, பல வருடங்கள் ஆனதால் ஞாபகம் இல்லை.

2. ராஜேசேகரனுக்கும் எனது தாயாருக்கும் நான் எந்த தேதியில் பிறந்தேன் என்று தேதி குறிப்பிட வில்லை என்றால் சரிதான். எனது பிறப்புச் சான்றிதழ் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. நான் ராஜசேகரின் மகள் நான்தான் என்பதற்கான இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தவிர இதர ஆவணங்கள் உள்ளதா என்றால் போட்டோ உள்ளது. அதை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

4. எனக்கும் எனது கணவருக்கும் நடந்த திருமணத்திற்கு போட்டோ எடுத்தார்களா என்றால் பல வருடங்களுக்கு முன்பு நடந்ததால் எடுக்கவில்லை. எனது அம்மா மல்லிகாவும் ராஜசேகரனும் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்தார்களா என்றால் வாழ்ந்தார்கள். இருவரும் சேர்ந்து வாழ்ந்ததற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. எனக்கு எத்தனை மகன்கள் என்றால் 2 மகன்கள் உள்ளனர். எனது அம்மா மல்லிகாவிற்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் 75 வயது இருக்கும். வா.சா.ஆ.5 மற்றும் 6 ஆவணங்கள் என்னால் வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யபட்டது என்றால் சரியல்ல.

6. மல்லிகா ராஜசேகரை திருமணம் செய்ய வில்லை என்றும், நான் ராஜசேகரின் வாரிசு இல்லை என்பதால் நான் கோருகின்ற பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**5 மற்றும் 6 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. ராஜசேகரனுக்கு இரண்டு மனைவிகள் உள்ளதாக வழக்குரையில் சொல்லியுள்ளதால் முதல் மனைவி யார் என்றால் 1ம் வாதியான எனதுஅம்மா மல்லிகா. இரண்டாவது மனைவி யார் என்றால் 1ம் பிரதிவாதி தவசுமல்லி. தவசுமல்லிக்கு எத்தனை பசங்க என்றால் 2 முதல் 4 பிரதிவாதிகளான சத்யா, கிருஷ்ணமூர்த்தி, பாரதி.

2. ராஜசேகரனுக்கும் அவரது 2 ம் மனைவியான தவசுமல்லிக்கும் பிறந்த குழந்தைகளான 2 முதல் 4 பிரதிவாதிகளான சத்யா, கிருஷ்ணமூர்த்தி, பாரதி ஆகியோரகளும் வாரிசுகள் என்று விளம்புகை கோராமல் தாக்கல் செய்த வழக்கானது தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.07.21 12:00:56 +0530

District Munsif

Mannargudi.